# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1277/2022 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஆத்மநாதன் | த-பெ | ராஜசேகரன் |
| ஊர்: | : | அறந்தாங்கி | | |
| வயது: | : | 61/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | காவல் துணை கண்காணிப்பாளர் ஓய்வு | மாவட்டம் | புதுக்கோட்டை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2026

**எதிரி ஆஜர்.**

---

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் அறந்தாங்கியில் வசித்து காவல் துணை கண்காணிப்பாளராக பணி செய்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். கடந்த 2019 ம் வருடம் காரைக்குடி வடக்கு காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணி செய்தபோது நிலைய சார்பு ஆய்வாளர் மணிமொழி என்பவர் பதிவு செய்த குற்ற எண்.191/2019 என்ற விபத்து வழக்கை மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு ஒப்படைத்தார். விசாரணைக்கு எடுத்து கொண்ட நான் 06.06.2019 அன்று இந்த வழக்கில் இறந்துபோன தைனிஸ்மேரி என்பவரின் பிரேதத்தின் மீதான பிரேத விசாரணையை காரைக்குடி அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் இறப்பிற்கான காரணம் அறியும் பொருட்டு தலைமை காவலர் அழகர் சாமி என்பவர் மூலமாக அரசு மருத்துவர் மணிமாறன் என்பவர் வசம் ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டு அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

வழக்கின் எதிரியை தேடி சென்ற நிலையில் 04.06.2019 அன்று 20.00 மணிக்கு நிலையத்தில் ஆஜர் ஆன எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை விபத்தாய்விற்காக மோட்டார் வாகன ஆய்வாளர் முருகன் என்பவர் வசம் ஒப்படைத்து அவரிடம் இருந்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ 8**. இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் 7 முதல் 10 வரையிலானவர்களை விசாரணை செய்து வழக்கின் விசாரணை நிறைவு செய்து 08.07.2019 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த தேதி நேரம் எப்போது என்றால் 03.06.2019 அன்று இரவு 8.30 மணி. சம்பவம் குறித்து தகவல் எவ்வாறு தெரிந்தது என்றால் 04.06.2019 அன்று மருத்துவமனையில் இருந்து தகவல் வந்தபின்னர் மருத்துவமனை சென்று புகாரை பெற்றுகொண்டோம். புகாரானது 03.06.2019 அன்று பெற்றப்பட்டது என்றால் அது தவறு. புகார்தாரர் காவல் நிலையம் வந்து ஆஜர் ஆகி புகார் அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகள் 1முதல் 6 வரையிலானவர்களை சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தார் என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 1முதல் 4 வரையிலானவர்கள் விபத்தின் இறந்த நபரின் உறவினர்கள் என்று விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வழக்கில் புகார் யாரால் அளிக்கப்பட்டது என்றால் காயம்பட்ட நபரின் மருமகளால் அளிக்கப்பட்டது. சம்பவ நேரம் இரவு என்றால் சரிதான். சம்பவ இடம் 120 அடி சாலை என்றால் சரிதான். சம்பவ சாலை விசாலானமான சாலை மற்றும் போக்குவரத்து அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவ சாலையில் நடுவில் தடுப்பு சுவர் இருக்கும் என்றால் சரிதான். புகாரிலும் முதல் தகவல் அறிக்கையும் இறந்த நபர் ரோட்டின் வடக்கு பக்கமாக மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வரைபடத்தில் நடு தடுப்பு சுவர் அருகில் விபத்து இடம் குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் இறந்த நபர் வயது முதிர்ந்தவர் என்றால் சரிதான் சம்பவத்தின் போது வயது 63. புகாரில் சம்பவத்தில் ஈடுபட்ட நபரின் பெயரை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கில் குறிப்பிட்டுள்ளவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவ நேரத்தில் சம்பவ சமயத்தில் விபத்தில் காயம்பட்ட நபர் வயது முதிர்வு காரணமாக கவனக்குறைவாக சாலையை கடந்து இந்த விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை முறையாக விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.07.22 11:26:46 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.